# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8110256

1. District : திருவண்ணாமலை மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு திருவண்ணாமலை காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No. 08/2020 மு.த.அ. எண் Date: 17/10/2020 நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்: Sec 7
   (ii) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: by PC (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 16.10.2020-ஆம் தேதி மாலை 16.30 மணிக்கு முன்பு
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.10.2020-ஆம் தேதி Time : நேரம் காலை 11.30 மணிக்கு
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக எழுத்து மூலமாக தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனு.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் ஆரணி சார்பதிவாளர் அலுவலகம் வடகிழக்கு 63 கி.மீ.
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. து. [illegible] (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. ப. துளசி.
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1971 (d) Nationality : நாட்டினம் இந்தியர் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், (g) Address : முகவரி வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திரு. க. செல்வம், வயது. 36/2020, உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செய்யார், சார்பதிவாளர் (பொறுப்பு), ஆரணி சார்பதிவாளர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
17/10/2020
P. LAKSHMIKANTHAN

15. Date & Time of despatch to the court: On 17.10.2020
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 12.45 hrs.

Name: பெயர் DSP/ VSAC/ TDM.
Rank: நிலை .................. No. எண் ..........

பணிந்து அனுப்பப்படுகிறது :

இன்று 17.10.2020-ஆம் தேதி பகல் 11.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்த போது அனுப்புநர் து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை. **ந.க.எண்.8871/S1/2020, நாள்:** 17.10.2020 அய்யா, பொருள்: திடீர் சோதனை – திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.10.2020 அன்று 16.30 மணி முதல் இரவு 21.15 மணி வரை இருதுறை கூட்டு திடீர் சோதனை மேற்கொண்டது - கைப்பற்றப்பட்ட பணம் மற்றும் ஆவணம் – ஒப்படைப்பு - நடவடிக்கை எடுக்கக் கோருதல் - தொடர்பாக. பார்வை: சம்மந்தப்பட்ட ஆவணங்கள். 16.10.2020-ஆம் தேதி திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.30 மணி முதல் இரவு 21.15 மணி வரை இருதுறை கூட்டு திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது திரு.க.செல்வம், சார்பதிவாளர் (பொறுப்பு) ஆரணி சார்பதிவாளர் அலுவலகம் (உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செய்யார்) அவர்கள் பணியில் இருந்தார் அப்போது அலுவலகத்தின் உள்ளே நுழையும் போது பத்திர எழுத்தர் திரு.பிச்சாண்டி தூக்கி எரிந்த ரூ.14,000/-மும், அலுவலகத்தின் பதிவு வைப்பறை மற்றும் அலுவலக ஹாலில் வைக்கப்பட்டிருந்த பணம் ரூ.53,560/-மும் இருந்தது. அந்தப்பணம் பற்றி அலுவலகத்தில் விசாரிக்க, அதற்கு யாரும் உரிமை கோராததால் ரூ.67,560/- கைப்பற்றப்பட்டது. மேலும், ஆரணி சார்பதிவாளர் (பொறுப்பு) ஆஜர் செய்த அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேடு, தனிநபர் கையிருப்பு பதிவேடு, “H” Account-இன் ஆன்லைன் பிரதி மற்றும் “A” Account-இன் ஆன்லைன் பிரதி ஆகியவற்றை கைப்பற்றி இத்துடன் ஒப்படைக்கிறேன். இது தொடர்பாக திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் 16.10.2020-ஆம் தேதி தயாரிக்கப்பட்ட எனது செயல்முறை கடிதத்தில் முழு விபரம் உள்ளது அதை இத்துடன் இணைத்து இன்று 17.10.2020-ஆம் தேதி 11.30 மணிக்கு உரிய நடவடிக்கைகாக அனுப்புகிறேன். கைப்பற்றப்பட்ட தொகை இலஞ்ச பணமாகத்தான் இருக்கும் என்ற அடிப்படையில் பொறுப்பு சார்பதிவாளர் திரு.க.செல்வம் அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு: வாக்குமூலம்-1 (Sd XXXXX) து.கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். மேற்படி புகார் மனுவுடன் புகார் தாரர்

இணைத்தனுப்பிய திடீர் சோதனை நடவடிக்கைகள் குறித்து செயல்முறை பின்வருமாறு உள்ளது. வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு, திருவண்ணாமலை பிரிவு அலுவலர்களால், திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி நகரம், எண் 7, கோட்டை தெற்கு தெருவில் அமைந்துள்ள ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் இன்று 16.10.2020 மாலை 1630 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இருதுறை திடீர் கூட்டு சோதனை நடவடிக்கைகள் குறித்த செயல்முறை:- முன்னிலை 1. திரு.து.கிருஷ்ணமூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். 2. க.செல்வம், உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செய்யார், சார்பதிவாளர் (பொறுப்பு) ஆரணி சார்பதிவாளர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம். 3. திரு.பெ. லட்சுமி காந்தன், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம். திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி நகரம், எண் 7, கோட்டை தெற்கு தெருவில் அமைந்துள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்கு பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைதரகர்கள் (புரோக்கர்கள்) மூலமும் கையூட்டு பெறுவதாக கிடைக்க பெற்ற நம்பகமான தகவலின் பேரில் இன்று 16.10.2020 மாலை 1630 மணிக்கு வேலூர்,திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் ஆய்வுக்குழு அலுவலர் திரு.து.கிருஷ்ணமூர்த்தி தலைமையில், திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் இணைந்து ஆரணி சார்பதிவாளர் அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

2. இந்த அலுவலகமானது ஆரணி நகரம், எண் 7, கோட்டை தெற்கு தெருவில் அமைந்துள்ள வடக்கு திசை நோக்கி அமைந்துள்ளது. இந்த சார்பதிவாளர் அலுவலகத்தை சுற்றி சுற்று சுவர் கட்டப்பட்டு, ஒரு கிரில் கதவு போடப்பட்டுள்ளது. சாாபதிவாளர் அலுவலக கட்டடத்தின் முன் பகுதியில் சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி என எழுதப்பட்டுள்ளது. சார் பதிவாளர் அலுவலகத்தின் தலைவாயில் மரக்கதவுகளாள் உள்ளது. அந்த தலைவாயிலின் வழியாக அலுவலகத்தின் உள்ளே நுழைவதற்கு முன் 10'x80' பொது மக்கள் காத்திருக்கும் ஹால் ஒன்று உள்ளது. அதில் பொது மக்கள் உட்காருவதற்காக பென்ச்கள் போடப்பட்டுளளது. பொது மக்கள் காத்திருக்கும் ஹாலிலிருந்து சார் பதிவாளர் அலுவலகத்திற்குள் நுழைந்தவுடன் 20'x20'

அளவுள்ள ஒரு நீண்ட அலுவலக ஹால் உள்ளது. அந்த ஹாலின் கிழக்கு திசையில் 25'x60'அளவுள்ள பதிவறை உள்ளது. அந்த ஹாலின் பின்பக்க கதவிற்கு மேற்கு பக்கம் கண்ணாடி கேபின் உள்ளது. ஹாலின் பின்பக்க கதவிற்கு மேற்கு பக்கம் கண்ணாடி கேபினை ஒட்டியவாறு வடக்கு திசை பார்த்தவாறு சார் பதிவாளர் இருக்கையும், ஹாலின் பின்பக்க கதவிற்கு கிழக்கு பக்கம் வடக்கு நோக்கி அலுவலக உதவியாளர் (சார்பதிவாளர் பொறுப்பு) இருக்கையும், மேற்கு நோக்கி மற்றொரு உதவியாளர் இருக்கையும், மேலும், சார்பதிவாளர் பொறுப்பு இருக்கைக்கு எதிர்புறத்தில், வடக்கு திசையில் தெற்கு பார்த்தவாறு தலைவாயிலை ஒட்டியவாறு அலுவலக உதவியாளர் இருக்கையும் அதற்கு கிழக்காக மற்றொரு உதவியாளர் இருக்கையும், தலைவாயிலை ஒட்டியவாறு ஹாலின் மேற்கு பக்கம் டேட்டா என்ட்ரி ஆபரேட்டர் இருக்கையும், தொடர்ந்து ஹாலின் மேற்கு பக்கம் கண்ணாடி மற்றும் அலுமினிய பீடிங்குகளால் செய்யப்பட்ட 15'x20' அளவுள்ள கணினி அறை ஒன்று உள்ளது. அந்த அறையில் நான்கு கணினிகளும், HP Laser Jet Pro MFP M 435, M 436, Scaner FI-7160 ஆகியன உள்ளன. சார் பதிவாளர் இருக்கை உள்ள அலுவலக ஹாலின் பின் பக்க வாயிலை வழியாக 20'x10' அளவிற்கு மேற்கு திசையில் ஒரு காலி அறையும் கிழக்கு திசையில் 10'x10' அளவுள்ள பழைய பதிவேடுகள் வைப்பறை ஒன்றும் உள்ளது. பின் பக்கம் சுற்றுசுவருடன் 80'x50' அளவுள்ள காலியிடம் உள்ளது. 3. இந்த திடீர் சோதனையை ஆரம்பிப்பதற்கு முன்பு திரு.க.செல்வம், வயது 36/2020, உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செய்யார் 05.08.2020 முதல் Deputaion சார் பதிவாளர் (பொறுப்பு) ஆரணி, மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. 4. இந்த திடீர் சோதனையின் போது 1) திரு.க.செல்வம் (36/2020), த/பெ கணேசன், (சார் பதிவாளர் பொறுப்பு), 2) திரு.லோ. ரங்கநாதன், (56/2020), த/பெ லோகையா, உதவியாளர், 3) திரு.கோ.திவாகர் (28/2020), த/பெ கோட்டீஸ்வரன், உதவியாளர், 4) திரு. வெ. புருஷோத்தமன் (25/2020), த/பெ வெங்கடேசன், இளநிலை உதவியாளர், 5) திரு. திருமதி. ம. ராஜேஸ்வரி (50/2020), க/பெ மணி, அலுவலக உதவியாளர், 6) திரு. ஆதிகேசவன் (27/2020) த/பெ ஆனந்தன், டேடா என்ட்ரி ஆபரேட்டர், 7) திரு.ந.அஜித்குமார் (23/2020) த/பெ நடராஜன், டேடா என்ட்ரி ஆபரேட்டர், 8) திரு.ப.சந்தோஷ்குமார் (26/2020) த/பெ பழநி கேமரா ஆபரேட்டர் ஆகியோரும், டாகுமெண்ட் ரைட்டர் மற்றும் பொது மக்கள் சிலர் சார்பதிவாளர் அலுவலகத்தினுள்

இருந்தார்கள். 5. பின்னர் வேலூர் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் என்னுடன் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்கள், சார் பதிவாளர் அலுவலகத்தின் உள்ளே நுழையும்போது பொதுமக்கள் அமருமிடத்தில் பத்திர எழுத்தர் திரு. மு.பிச்சாண்டி (47/2020) த/பெ முருகேசன் என்பவர் ஐநூறு ரூபாய் தாள்களை எண்ணிகொண்டிருந்தவர் ஆய்வுக்குழு அலுவலர் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களை கண்டதும் கையில் எண்ணிக்கொண்டிருந்த பணத்தை அலுவலக வாசலில் தூக்கி எரிந்துவிட்டார் அந்த பணத்தைப்பற்றி கேட்க தன்னுடையது இல்லை என கூறினார். அந்த பணத்தை எடுத்த எண்ணிப்பார்க்க அதில் ரூ.14,000/- இருந்தது. மேலும் அலுவலகத்தில் விசாரிக்க யாரும் அப்பணத்திற்கு உரிமை கோரவில்லை. எனவே இப்பணம் கைப்பற்றப்பட்டது. பணியில் இருந்த அலுவலர்கள் தங்களிடமிருந்த இருந்தபணத்தை ஆஜர் செய்தனர். பணத்திற்கு தக்கமுகாந்திரம் கூறியதாலும் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் இருந்த விவரங்களுடன் ஒத்துப்போன காரணத்தால் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது விபரம் பின்வருமாறு.

| வ. எண். | அலுவலர்களின் பெயர், பதவி மற்றும் விலாசம் | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1. | திரு.க.செல்வம் (36/2020), த/பெ கணேசன், உதவியாளர் (சார் பதிவாளர் பொறுப்பு), சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.440/- | ரு.440/- |
| 2 | திரு.லோ. ரங்கநாதன், (56/2020), த/பெ லோகையா, உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.700/- | ரூ.700/- |
| 3 | திரு.கோ.திவாகர் (28/2020), த/பெ கோட்டீஸ்வரன், உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.680/- | ரூ.680/- |
| 4 | திருமதி. ம. ராஜேஸ்வரி (50/2020), க/பெ மணி, அலுவலக உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.500/- | ரூ.500/- |
| 5 | திரு. ஆதிகேசவன் (27/2020) த/பெ ஆனந்தன், டேடா என்ட்ரி ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.130/- | ரூ.130/- |

| | | | |
|---|---|---|---|
| 6 | திரு.ந.அஜித்குமார் (23/2020) த/பெ நடராஜன், டேடா என்ட்ரி ஆபரேட்டர், சார் பதிவாளர் அலுவலகம், ஆரணி. | ரூ.130/- | ரூ.130/- |

6. பின்னர் அலுவலகத்தின் அனைத்து அறைகளிலும் தணிக்கை செய்யபப்பட்டது. அப்போது அலுவலகத்தின் பதிவு வைப்பறையில் ஜன்னல் கம்பிக்கும், அதன் மீது சாய்த்து வைக்கப்பட்ட இரும்பு பீரோவுக்கும் இடையே ரூ.7,450/- ம், வடக்கு பக்க சுவற்றில் சாற்றி வைக்கப்பட்டுள்ள பச்சை நிற இரும்பு பீரோவுக்கு மேலே வைக்கப்பட்டிருந்த அட்டைக்கு கீழே ரூ.20,640/- ம் பதிவறையில் இருந்த பணப்பெட்டியின் கீழ் ருபாய்-600/-ம், பதிவறையில் இருந்த 2000-ஆம் ஆண்டு ஒகையூர் கிராமம் வழிகாட்டி பதிவேட்டிற்கு இடையில் ருபாய் 21,870/- மற்றும் அலுவலக ஹாலின் அலுவலக உதவியாளர் மேஜையின் கீழ் இருந்த குப்பைத்தொட்டி அருகில் ரூ.3000/- ம் இருந்தது. இந்த பணத்தை பற்றி யாருடையது என்று விசாரிக்க, யாரும் உரிமை கோராததால், மேற்கண்ட மொத்த பணம் ரூ.53,560/- கையூட்டுப்பணமாக இருக்கும் என கருதி கைப்பற்றப்பட்டது. 7. பின்னர் ஆரணி சார் பதிவாளர் அலுவலகத்திற்கு வந்திருந்த டாகுமெண்ட் ரைட்டர் மற்றும் பொது மக்களை தணிக்கை செய்ததில் அவர்களிடம் இருந்த பணத்திற்கு அவர்கள் தக்க முகாந்திரம் கூறியதால் அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது அதன் விவரம் பின்வருமாறு.

| வ. எண். | பொது மக்கள் (பெயர் மற்றும் விலாசம்) | சோதனையிட அவர்களிடம் இருந்த பணம் | திருப்பி கொடுக்கப்பட்ட பணம் |
|---|---|---|---|
| 1. | திரு. வே.துரைராஜ் (35/2020), த/பெ வேலு, சோமந்தாங்கல், அரியாப்பாடி போஸ்ட், ஆரணி (கைபேசி எண்.8940456223) | ரூ.2,300-/- | ரூ.2,300-/- |
| 2. | திரு. இரா.முத்தமிழ்முரசு (31/2020), த/பெ.ராஜேந்திரன், நெ.137, பிள்ளையார் கோயில் தெரு, தெள்ளூர், சேத்பட் வட்டம். (கைபேசி எண்.9500036576) | ரூ.4,200/- | ரூ.4,200/- |
| 3. | திரு.A.C.வெங்கடேசன், (48/2020), த/பெ.சின்னய்யா, ஆகாரம் கிராமம், விண்ணமங்கலம் போஸ்ட், சேத்பட் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.8148592789) | ரூ.2,650/- | ரூ.2,650/- |

| | | | |
|---|---|---|---|
| 4. | திரு. வ.முருகன், (39/2020), த/பெ. வரதராஜ், தண்டுமாரியம்மன் கோயில் தெரு, ஆரணி. திருவண்ணாமலை மாவட்டம்.(கைபேசி எண்.9894735838) | ரூ.4,400/- | ரூ.4,400/- |
| 5. | திரு.விஜயன், (39/2020) த/பெ.கண்ணன், எண்.4/1108, காமராஜர்நகர், அருந்ததியர் தெரு, அரியாப்பாடி கிராமம், ஆரணி வட்டம், திருவண்ணாமலை மாவட்டம். (கைபேசி எண்.9159601774) அக்ரிமெண்ட் ரத்துபத்திரம் (எண்.6807/2020) | ரூ.1,50,870/- | ஆரணி பத்திரப்பதிவு எண்.3121/2016, நாள் 29.04.2016-ன் படி அக்ரிமெண்ட்க்காக வாங்கிய முன்பணம் பத்திரப்பதிவு எண்.6807/2020 மூலம் ரத்து செய்யப்பட்டதால் திருமதி.பச்சையம்மாள் வகையராவிடமிருந்து பெற்ற தொகை ரூபாய்,.1,50,000/- மற்றும் தனது கைசெலவிற்காக வைத்திருந்த தொகை ரூபாய் 870/- விசாரித்து திரும்ப கொடுக்கப்பட்டது. |
| 6. | S.A.விஜயகுமார், (63/2020), த/பெ.அருணகிரி, ஆதார் எண்.2333 3182 9501, கதவு எண்.15, கெஞ்சி அருணகிரிதெரு, ஆரணிபாளையம், ஆரணி டவுன், திருவண்ணாமலை மாவட்டம் | ரூ.9,00,000/- | விண்ணமங்கலம் சர்வே எண்.2/3A, 2/3B அருணாச்சலம் நகரில் மனை எண்.8, 13, 14, 15 மற்றும் 16 ஆகிய வீட்டுமனையில் இன்று கிரையம் செய்த வகையில் வழிகாட்டி மதிப்பீடு சதுர அடி ரூபாய் 61/- என்ற நிலையில் ஒரு மனையின் விலை ரூபாய் 1,80,000/- வீதம் மேற்படி |

| | | | |
|---|---|---|---|
| | | | மனைகளுக்கு<br>1.சி.குமார்,<br>2.முத்தமிழ்முரசு,<br>3.தரணி<br>என்பவர்களுக்கு தலா ஒரு மனைக்காகவும் மற்றும் 4. அருள்மொழி என்பவருக்கு 2 மனைகளுக்காகவும் இன்று பத்திரப்பதிவு செய்தவகையில் அவர்களிடமிருந்து இந்த தொகை பெற்றதாக தகுந்த முகாந்திரம் கூறியதால் பணத்தை திருப்பி கொடுக்கப்பட்டது. |

8. பின்னர் சார் பதிவாளர் (பொறுப்பு) திரு.செல்வம் அவர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தின் அலுவலக வருகை பதிவேடு, தனிநபர் கையிருப்பு பதிவேடு, ஒரு பக்கம் கொண்ட 'H" Account-ன் ஆன் லைன் பிரதி மற்றும் 8 பக்கங்கள் கொண்ட இன்றைய ஆவணப்பதிவு விவரங்கள் அடங்கிய 'A" Account-ன் ஆன் லைன் பிரதி ஆகியவற்றை ஆஜர் செய்தார். ஆதில் ஆய்வுக்குழு அலுவலர் திரு. து. கிருஷ்ணமூர்த்தி, சார் பதிவாளர் திரு.செல்வம் மற்றும் காவல்துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. 9. அலுவலகத்தில் கையூட்டு என்று கருதப்படும் சந்தேகத்திற்கிடமான ரொக்கம் ரூ.67,560/-யை இருதுறை திடீர்சோதனையில் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது யாருக்கும் மனதளவிலோ, உடலளவிலோ எந்த துன்புறுத்தலும் ஏற்படுத்தவில்லை. மேலும், அலுவலகத்தில் உள்ள ஆவணங்களுக்கோ, பொருட்களுக்கோ எந்தவித சேதமும் ஏற்படுத்தவில்லை. 10. இந்த திடீர் சோதனை இன்று 16.10.2020 இரவு 21.15 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த செயல்முறையின் நகல் சார்பதிவாளர் அவர்களுக்கு வழங்கப்பட்டது. (Sd XXXXX) திரு.து.கிருஷ்ணமூர்த்தி, ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், திருப்பத்தூர், இராணிப்பேட்டை மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர். (Sd XXXXX) க.செல்வம், உதவியாளர், மாவட்ட பதிவாளர் அலுவலகம், செய்யார், சார்பதிவாளர் (பொறுப்பு) ஆரணி

சார்பதிவாளர் அலுவலகம், திருவண்ணாமலை மாவட்டம். (Sd XXXXX) திரு.பெ. லட்சுமி காந்தன், காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருவண்ணாமலை, திருவண்ணாமலை மாவட்டம்.

Sir,

Received the complaint on 17.10.2020 at 11.30 hrs and a case was registered in Tiruvannamalai V&AC Cr.No. 08/2020, u/s. 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018, on 17.10.2020 at 12.00 hrs. The FIR in original along with the complaint, Proceedings of Joint Surprise Check, Dated: 16.10.2020 and Statement were sent to Hon'ble CJM and Special Judge, Tiruvannamalai and sent the copies to the officers concerned. (Sd XXXXX) 17/10/2020 (P.LAKSHMIKANTHAN), DSP/V&AC/TVM.

17/10/2020
(P. LAKSHMI KANTHAN)
DSP/V&AC/TVM.